ஒரு அமைப்பை ஏற்படுத்தி அந்தக் கூண்டுகளை, உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் பைன் அன்ட் நைஸாக, கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

Memorandum from Tamil Nadu Animal Husbandry Attendants Association.

*Q. No. 99. THIRU R. UMANATH : Will the Hon the Minister for Social Welfare be pleased to state.—

(a) Whether the Government have received any memorandum, dated 19th March, 1981 from the Tamil Nadu Animal Husbandry Attendants Association?

(b) If so, the action taken by the Government?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : அ. இல்லை. இருப்பினும் கால்நடை பராமரிப்பு பணியாளர் சங்கத்தின் 6.3.1981 நாளிட்ட கடிதம் கிடைக்கப் பெற்றிருக்கின்றது.

(ஆ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ரா. உமாநத் : அந்தக் கோரிக்கைகளைப் பார்க்கிறபோது பரிசீலனையில் இருக்கவேண்டிய அவசியம் என்ன என்று தெரியவில்லை. ஏனெனில் மருந்தகத்தில் இரண்டு கால்நடைப் பணியாளர்கள், பேஸிக் வொர்க்கேர்ஸ் ஸ்டாட்டஸ்—ல் உள்ள பணியாளர்கள் இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அந்த இரண்டு பணியாளர்களும் டே அன்ட் நைட் பணியாற்ற வேண்டுமென்று சொன்னால் 12 மணி நேர வேலை ஒரு ஆளுக்கு வருகிறது. ஆனால் ஒருவருக்கு எட்டு மணி நேரம் தான் வேலை நேரம் என்றிருக்கவேண்டும். டே அன்ட் நைட் என்று வரும் போது ஒருவர் லீவில் போனால் மற்றவர் 24 மணி நேரமும், அவர் ஒருவர்தான் வேலை செய்யவேண்டும் என்ற நிலை. 1979-ல் நைட்வாச்மென் தனியாக அப்பாயின்ட் செய்ய ரெக்கமன்ட் செய்கிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை அமல்படுத்த பரிசீலனை என்ன தேவை?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : ஒரு மருந்தகத்திற்கு இரண்டு பணியாளர்கள் வீதம் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இரவு காவலரை அமைக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். இதைப்பற்றி அரசு பரிசீலித்து சீக்கிரம் முடிவு எடுக்கும்.

திரு. ரா. உமாநாத் : அமைச்சர் அவர்களின் இன்றைய நிலையில் நான் தொந்தரவு செய்ய விரும்பவில்லை. ஐந்து கோரிக்கைகள் இருக்கின்றன. சீக்கிரம் என்றால் எப்போது, ஒரு காலவரையறையாவது சொன்னால் பரவாயில்லை. தங்கள் பிரசவத்திற்கு முன்னால் அதை முடித்துவிட்டால் தேவலை.

[பதில் இல்லை.]